## 3

### வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# உங்கள் திருமணத்தை ஆன்மீக அஸ்திபாரத்தின்மேல் கட்டியெழுப்புதல்

*"தேவன்மேல் அஸ்திபாரம்" என்ற தலைப்பின்கீழ், அபிலீன் ரிப்போர்ட்டர் - நியூஸ் பத்திரிக்கையின் சனிக்கிழமை பதிப்பொன்றில் டெக்ஸாஸில் உள்ள கட்டுமானக் கம்பெனி பற்றிய இணைப்பத்திரிக்கை செய்தியொன்று வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் கம்பெனியார் கட்டிடும் ஒவ்வொரு வீட்டின் அஸ்திபாரத்திலும் ஓர் வேதாகமத்தை வைப்பதோடு, அவ்வீட்டின் சட்டங்களில் பொருத்தமான வேதவாக்கியப்பகுதிகளை எழுதிவிடுவார்களாம். "ஒவ்வொன்றிலும் தேவனுக்கு துதியும் கனமும் செலுத்துவது" தங்கள் நோக்கமாய் இருக்கிறது என்று கட்டிடக்காரர்களில் ஒருவர் விளக்கமளித்தார். "எங்களது வீட்டிலும் குடும்பத்திலும் வேதவசனத்திற்குள்ளே சமாதானத்தையும் ஒழுங்குமுறையையும் கண்டடைந்திருக்கிறோம், ஆக (வீடுவாங்கும்) இந்தக் குடும்பங்களும் அவ்விதமே இருக்க நாங்கள் விரும்புகிறோம்" என்று அவரது மனைவி கூறினார்.[1]*

அவர்களது கருத்து சரியானதே. தேவன்தான் திருமணத்தை தோற்றுவித்தவர் என்ற காரணத்தினாலும், நமது திருமணங்களுக்கு அவர் ஒருவரே வழிகாட்டும் அதிகாரமுடையவராயிருப்பதாலும், தேவன் தான் நமது திருமணங்களுக்கு அடித்தளம் அமைத்து தர வேண்டும் என்ற கருத்து நியாயமானதாக தோன்றுகிறது. உங்களுக்கு திருமணமாகும்போது உங்கள் திருமணம் ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தின்மேல் கட்டியெழுப்பப்படவேண்டும்.

## ஓர் ஆன்மீக அஸ்திபாரத்தின் அவசியம்

ஒரு திருமணமானது வேறொரு அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படக்கூடும். சிலர் தங்களது திருமணங்களை உலகப்பிரகாரமான வெற்றி எனும் அஸ்திபாரத்தின் மேல் கட்டியெழுப்புகின்றனர். வாழ்வில் முன்னேறுவதற்காக அவர்கள் திருமணம் செய்கின்றனர். வேறுசிலர் குடும்பபாரம்பரியமாகிய அஸ்திபாரத்தின் மேல் தங்கள் இல்லறங்களை கட்டுபவர்களாயிருக்கலாம். அவர்கள் தங்கள் வம்சாவழியை நிலைநிறுத்துவது அல்லது குடும்பத்தொழிலை நீட்டிப்பதுதான் திருமணத்தில் தங்களது கடமை எனக் கருதுகிறார்கள். மற்றும் சிலர் தங்கள் திருமணத்தை நேசத்தின்மேல் மாத்திரம் கட்டியெழுப்ப எண்ணுகிறார்கள். தங்களது பாலியல் ஆசைகளை திருப்திசெய்து கொள்ளும் ஒரே நோக்கத்தோடுதான் அவர்கள் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள்.

அப்படியானால், இத்திருமணத்தில் பாலியல் உறவு சலித்து போகும்போது அவர்கள் திருமணத்தை விட்டு விலகி பாலியல் திருப்திக்காக வேறு எங்காவது அலைவார்கள்.

திருமணத்திற்கான மிகச்சிறந்த அஸ்திபாரம் ஆவிக்குரிய அஸ்திபாரமாகும். இத்தகைய அஸ்திபாரமே காலத்தின் எதிர்மறை தாக்கங்கள், வாழ்க்கை மாற்றங்களின் பேரதிர்ச்சிகள், சேர்ந்து வாழ்ந்திடும்போது சேர்ந்தே வரும் ஏமாற்றங்கள் ஆகியவற்றை தாங்கக்கூடியதாய் இருக்கும். ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரமானது, குறைபாடுகளுள்ள இருவர் தங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் மன்னித்துக்கொள்வதற்கு திராணியளிப்பதோடு, குறைபாடுகளுக்கு மத்தியிலும் அவர்கள் சந்தோஷமாக சேர்ந்து வாழ்ந்திட இடமளிக்கிறது.

## ஆன்மீக அஸ்திபாரத்திற்கு தேவையானவைகள்

உங்கள் இல்லத்தை எவ்விதம் ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தின்மேல் கட்டிடலாம்? நேரடியாக ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தின் மேல் கட்டிடலாம்? நேரடியாக ஓர் வேதபுத்தகத்தை உங்கள் வீட்டிற்கு அடியில் வைத்திடுவதால் இந்தக் குறிக்கோள் நிறைவேறாது; மாறாக, உங்களது வாழ்க்கைத் துணையுடன் உங்கள் அன்றாட வாழ்வானது வேதவசன போதனையாலும் தேவபக்தியுள்ள சிந்தனையாலும் ஓர் கச்சையைப்போல் உறுதியாக கட்டப்பட்டிருக்க வேண்டும்.

### கிறிஸ்துவோடு இணைந்திருங்கள்

முதலாவது நீங்கள் கிறிஸ்துவுடன் இணைந்திருக்க வேண்டும்.மத சம்பந்தமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஒரு குடும்பம் பிரிந்திருக்குமானால் - உதாரணமாக, திருமணத்திலுள்ள ஆணும் பெண்ணும் வெவ்வேறு சபைகளில் ஆராதிப்பவர்களானால் - பிரச்சனை காத்திருக்கிறது.

*மதசம்பந்தமான கலப்பு திருமணங்களின் எதிர்மறையான விளைவுகள்.* மதசம்பந்தமாக பிளவுபட்டிருக்கிற வீட்டிலே எழுப்பும் பிரச்சனைகள் என்னென்ன? முதலாவதாக, தங்கள் மதவேறுபாடுகளின் காரணமாக கணவனும் மனைவியும் வாழ்நாள் முழுவதுமே ஒருவரை விட்டு ஒருவர் தனித்தனியே பெருமளவு நேரத்தை செலவிடுகின்றனர். உதாரணமாக, கிறிஸ்தவ பெண்மணி ஒருவர் ஆராதனைகளுக்கு தவறாமல் செல்லுகிறவராயிருந்து, அவரது கணவரோ அப்படிப்பட்டவராயில்லை எனில் ஆவிக்குரிய வகையில் அவர்கள் ஒரே வழியில் செல்லுகிறவர்களாயிருக்கமாட்டார்கள். மதரீதியான வேறுபாடுகள் வேறுபல பேதங்களுக்கும் வழிவகுத்திடலாம் - உதாரணத்திற்கு, எவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதில் வரும் முரண்பாடுகள், ஒழுக்க நெறிகள் போன்றவை.

மேலும், மதவிஷய வேறுபாடுகள் குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு பிரச்சனைகளை உருவாக்கிவிடுகின்றன. மதவிஷயங்களில் அம்மாவும் அப்பாவும் ஒத்துவராத நிலையில் பிள்ளைகள் என்ன செய்வார்கள்? தங்கள் பெற்றோரது சபைகளுக்கு தங்கள் நேரத்தை பங்கு போட்டுக்கொள்வார்கள். அல்லது ஒரு சபையை தெரிந்து கொண்டு மற்றதை விட்டுவிடுவார்கள்.[2] இந்த சாத்தியக்கூறுகள் ஒவ்வொன்றிலும் பாதிப்புகள் இருக்கத்தான் செய்கிறது;

*பிள்ளைகள் குழம்பிப்போய், எந்தவிதமாய் ஆராதிப்பது என்பதை முடிவு செய்வதில் பல்வேறு திசைகளில் அலைக்கழிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம். இறுதியில், அவர்கள் எந்த சபையிலும் தங்களுக்கு தொடர்பு வேண்டாமென்ற முடிவுக்கு வந்துவிடலாம்.*

*கிறிஸ்துவுக்குள் இணைந்திருப்பது எப்படி.* தம்பதியர் ஆவிக்குரிய வகையில் ஒருமித்தவர்களாய் இருப்பது மிகவும் நல்லது. ஒரு கிறிஸ்தவர், வேற்று நம்பிக்கையுள்ள ஒருவரை திருமணம் செய்து கொள்ளுதல் ஒருபோதும் ஓர் நல்ல யோசனையல்ல. உங்களது விசுவாசத்திற்கு மாறுபட்ட நம்பிக்கையுள்ள ஒருவரை நீங்கள் திருமணம் செய்யப்போவதாயிருந்தால், உங்கள் குடும்பத்தை மதரீதியாக ஒன்றுபடுத்துவதற்கு வழிதேடியாக வேண்டும். எவ்வாறு? தேவனுடைய வசனமாகிய வேதாகமத்தை வாசித்து அதனைக் கடைப்பிடியுங்கள். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசிக்க வேண்டும் (யோவான் 8:24), உங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3; நடபடிகள் 17:30), கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9, 10), பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் (நடபடிகள் 2:38; மாற்கு 16:16) என்று வேதாகமம் போதிக்கிறது. இந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படியுங்கள், அப்போது நீங்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுவீர்கள் (நடபடிகள் 2:47). இயேசுவானவர் கட்டின சபையைக் குறித்து புதியஏற்பாடு விவரிக்கிறது (மத்தேயு 16:13-20; காண்க எபேசியர் 5:23-25). அந்த சபையின் செயலாக்கமுள்ள அங்கத்தினர்களாய் இருந்திடுங்கள், அப்போது நீங்கள் தேவனுக்கு பிரியமாயிருந்து, உங்கள் பிள்ளை களை ஆசிர்வதித்து உங்களது திருமணம் வெற்றிபெற உதவிடுவீர்கள்.

**கிறிஸ்தவர்களாய் வாழ்ந்திடுங்கள்**

நீங்கள் கிறிஸ்துவில் இணைந்திருந்து ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தின்மேல் உங்கள் வீட்டைக் கட்டிட தீர்மானித்திருப்பீர்களேயானால், மேற்கொண்டு நீங்கள் செய்ய வேண்டியதென்ன? எல்லாவற்றிற்கும் மேலாக, கணவனும் மனைவியுமாகிய இருவருமே தங்களாலானமட்டும் ஆவிக்குரியவர்களாயிருப்பதற்கு - அதாவது தேவன் எவ்விதம் விரும்புகிறரோ அவ்விதமாய் வாழ்கிறவர்களாய் இருப்பதற்கு முயன்றிட வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்னர் பரவலாக பயன்படுத்தப்பட்ட ஓர் கைபிரதியின் தலைப்பு, "மேன்மையானதோர் உலகம் என்னிலிருந்து ஆரம்பமாகிறது" என்றிருந்தது. கிறிஸ்தவ கணவன் மனைவி ஆகிய இருவருமே, "மேன்மையானதோர் இல்லம் என்னிலிருந்துதான் ஆரம்பமாகிறது" என்று தனித்தனியே தீர்மானித்திட வேண்டும். கிறிஸ்தவர்களாகிய இருவர் முழுமூச்சுடன் கிறிஸ்தவ வாழ்க்கை[3] வாழ்வார்களேயானால் அந்தத் திருமணம் வெற்றியுள்ளதாகத்தான் இருக்கும்.

**தேவனுடைய குடும்ப அமைப்பினை ஏற்றுக்கொள்ளுங்கள்**

குடும்பத்தின் அமைப்பு பற்றிய தேவனுடைய வழிமுறைகளை நீங்கள் கடைப்பிடித்தாக வேண்டும். அவருடைய தெய்வீக திட்டத்தை அனுசரித்தல், அநேக பிரச்சனைகளைத் தவிர்த்திடும் அல்லது தீர்த்திடும்.

*புருஷனுக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்.* கிறிஸ்துவே குடும்பத்தின் தலைவராயிருக்கிறார் என்பதை கணவனும் மனைவியுமாகிய இருவருமே

புரிந்துகொள்ள வேண்டும்.பெண்ணுக்கு ஆண்தான் தலைவன் என்றாலும் ஆணுக்கு கிறிஸ்து தலைவராயிருக்கிறார் என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 11:3) அப்படியானால் கிறிஸ்துவே குடும்பத்தின் தலைவராயிருக்கிறார்.

*மனைவிக்கு புருஷன் தலையாயிருக்கிறார்.* மேலும், பெண்ணுக்கு ஆண் தலைவராயிருக்கிறான் என்றும், பெண் ஆணுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும் வேதாகமம் போதிக்கிறது (1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 5:22-24; கொலோசெயர் 3:18; 1 பேதுரு 3:1அ). அநேகர் இன்று இந்தக் கருத்தினை, அந்தக் காலத்து நாகரீகமென்றும், பாலின பாகுபாடுமிக்கது என்றும், பெண்களை மட்டம்தட்டுகிற அபாயகரமான ஒன்று என்றும் கூறி ஒதுக்கித் தள்ளுகின்றனர். கணவன்மாருக்கு அடங்கியிருக்க வேண்டும் என்று தாங்கள் மிரட்டப்படுவதாகவும் பெண்கள் ஒருவேளை நினைக்கலாம். கணவன்மார்களும் இந்த வேத உபதேசத்தை மனைவிகளுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தும்படிக்கு புரட்டிப் பேசக்கூடாது.

பிரச்சனை என்னவென்றால், இந்த வேதபோதனையைப் பற்றிய நான்கு உண்மைகளை மக்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பதுதான்.

(1) கிறிஸ்தவனாகிய தான் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவன் என்ற உண்மையானது, மனைவியின்மேல் கணவனுக்குள்ள அதிகாரத்தில் மாறுதலை ஏற்படுத்துகிறது. ஆகையால், கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு முரண்பாடான எவ்விதத்திலும் அவர் தனது மனைவியிடம் நடந்துகொள்ள முடியாது.

(2) இந்தக் குறிப்புகளெல்லாம் மேன்மையாயிருத்தல் அல்லது கீழாயிருத்தல் பற்றினதல்ல; மாறாக, இவைகள், குடும்பம் செவ்வனே செயல்படுவதற்குரிய ஓர் திட்டமாய் இருக்கிறது. புருஷன் ஸ்திரீக்கு தலையாயிருக்கிறான் என்பதால் அவன் தன் மனைவியைவிட மேன்மையானவன் என்று பொருளல்ல, ஆனால் திருமணத்தில் அவனுக்கென்று ஓர் வித்தியாசமான பொறுப்பு இருக்கிறது என்றே பொருளாகும். திருமணத்திலே, வழிநடத்துகிற பொறுப்பினை புருஷனிடத்தில் ஒப்படைத்திட வேண்டுமென்று தேவன் குறிப்பிட்டிருக்கிறார்.

(3) ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருத்தலைப் பற்றிய பகுதியில்தான் புருஷனுடைய தலைமைத்துவம் காணப்படுகிறது. மனைவிகள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று எபேசியர் 5:22ல் எழுதுவதற்கு முன்னரே, கிறிஸ்தவர்களனைவரும் “ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்” என்று எபேசியர் 5:21ல் பவுல் எழுதினார். ஆண்தான் பெண்ணை வழிநடத்துகிறவனாயிருந்தாலும் ஒரு வகையில் அவனும் அவளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டியதாயிருக்கிறது.

(4) ஆணின் தலைமைத்துவத்தில், அவன் தன்னை எவ்வளவாய் நேசிக்கிறானோ, தன் சரீரத்தை எவ்வளவாய் நேசிக்கிறானோ அந்த அளவிற்கு தனது மனைவியையும் நேசிக்கவேண்டுமென்ற நிபந்தனையும் இணைந்திருக்கிறது. கிறிஸ்து சபையை எவ்வளவாய் நேசித்தாரோ அந்த அளவுக்கு அவன் அவளை நேசிக்க வேண்டும் (எபேசியர் 5:25, 28, 33). கிறிஸ்து தனது மணவாட்டியாகிய[4] சபையை எந்த அளவிற்கு நேசித்தார்? அவளுக்காக மரிக்கும் அளவுக்கு! அதுபோலவே, கணவன் தன் குடும்பத்தை வழிநடத்திட வேண்டும்? அதுவும், சபைக்காக உயிர்விட்ட கிறிஸ்துவின் முன்மாதிரி போலவே வழிநடத்திட வேண்டும்.

அவ்விதமாக தன் மனைவியை நேசிக்கிற கணவன், மனதார அவளை நோகடிக்கவோ, அல்லது அவளுக்கு இழப்பை ஏற்படுத்திடவோ மாட்டான். அவளுக்கென்று மரிப்பதாயிருந்தாலும் சரி, எதைச் செய்தாலும் அதை அவளுக்கென்றே செய்திடுவான்! அவள் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பதுவே அவனது மிகப்பெரிய ஆசை. கணவன் அப்படிப்பட்ட மனோ பாவமுடையவராய் இருப்பாரேயானால் அவரது தலைமைத்துவம் பற்றி மனைவி அச்சப்படமாட்டாள்.

*பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்திட வேண்டும்.* பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்தவர்களாய் இருக்க வேண்டுமென வேதாகமம் போதிக்கிறது (எபேசியர் 6:1-3). எனவே, தேவனுடைய அஸ்திபாரத்தின் மீதும் அவரது வசனத்தின் மீதும் தங்களது இல்லத்தைக் கட்டியெழுப்பிட முயற்சிக்கும் எந்த கணவனும் மனைவியும், தங்கள் பிள்ளைகளை வழிநடத்தவோ, போதிக்கவோ, அல்லது திருத்தவோ அனுமதிக்க மறுக்கும் எந்தவிதக் கொள்கையையும் வெறுத்து ஒதுக்க வேண்டும். அவர்களின் பிள்ளைகள் அவர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க வேண்டும்.

**சபையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள்**

இத்துடன் கூடுதலாக கிறிஸ்துவின் மீது உங்கள் இல்லத்தைக் கட்டியெழுப்ப விரும்புவீர்களேயானால், உங்கள் திருமணத்தில் சபைக்கு ஓர் முக்கிய பங்கு இருந்திட வேண்டும். கிறிஸ்துவையும் அவரது சபையையும் பிரித்திட இயலாது;[5] சபையை அலட்சியம் செய்கின்ற ஒருவன் தன்னை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்திருக்கிறேன் என்று கூறிக் கொள்ளுதல் முறையாகாது. உங்களிருவரது வாழ்வில் நீங்கள் சபைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப் பின்வரும் விஷயங்களில் காணலாம்: (1) அதற்காக நீங்கள் செலவிடும் நேரம், (2) அதற்கென்று நீங்கள் அளித்திடும் பணத்தின் அளவு (3) அதன் முன்னேற்றத்திற்கென்று நீங்கள் பயன்படுத்தும் உங்களது திறமைகள்.

கணவனும் மனைவியுமாகிய இருவருமே சபையின் ஊழியத்திலும் ஆராதனையிலும் முழுமையான ஈடுபாடுள்ளவர்களாயிருக்கும் திருமணங்களில் விவாகரத்து ஏற்படாது என்பதற்கில்லை, ஆயினும், தம்பதியர் இருவருக்குமே சபையில் ஈடுபாடு இல்லாத திருமணங்களைவிட அவை நீடித்திருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆதாரனை வேளைகளில் பங்கு கொள்ளுதல் திருமணத்தில் உண்டாக்கும் தாக்கம் பற்றி 1980ம் வருடத்திய கட்டுரை ஒன்றில் அருமையாக விவரிக்கப்பட்டிருந்தது:

> சபையில் பங்கு கொள்ளுதல் திருமணத்தில் உறுதியின்மை ஏற்படுவதற்குரிய சாத்திய குறைவுடன் குறிப்பிடத்தக்க விதத்தில் சம்பந்தப்பட்டிருந்தது. வருடத்தில் ஒரு முறைக்கும் குறைவாக சபைக்கு வரும் தம்பதியினரிடையே விவாகரத்து அல்லது பிரிவு என்பது 34.5 சதவீதமாக இருந்தது; வருடத்தில் ஒன்றிலிருந்து பலமுறை சபைக்கு வருகின்றவர்களுக்கு அது 26.7 சதவீதமாயிருந்தது; மாதமொரு முறைக்கு மேல் சபைக்கு வருகின்றவர்களுக்கு அது 18.1 சதவீதமாயிருந்தது. அத்தோடு, வருடத்திற்கு ஒருமுறைக்கும் குறைவாக சபைக்கு வரும் தம்பதியரோடு ஒப்பிடுகையில், சபைக்கு அடிக்கடி வருகின்ற

தம்பதியரின் திருமணங்கள் 2.6 மடங்கு கெட்டியானதாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்டது.[6]

**வீட்டை ஓர் மத ஸ்தாபனமாக மாற்றிடுங்கள்**

அடுத்ததாக, உங்களது வீடானது தேவன் மகிமைப்படுகிற,வேதம் போதிக்கப்படுகிற ஓர் இடமாக இருக்கிறதா என்பதை ஊர்ஜிதம் செய்துகொள்ளுங்கள். வீடென்பது சமூகத்தில் மிகவும் அடிப்படையான மத ஸ்தாபனமாக இருந்திட வேண்டும். விசுவாசப் *பற்றுதலும் போதனையும்* வீட்டிலே நடைபெறுகிறது. விசுவாசத்தின் அர்த்தத்தை தாயும் தகப்பனும் தங்கள் வாழ்க்கையில் வெளிக்காட்டுவதன் மூலம் விசுவாசப் பற்றுதல் ஏற்படுகிறது. கிறிஸ்தவ குடும்பத்திலே, கணவனும் மனைவியும் ஒருவரது விசுவாசத்தை மற்றொருவர் பலப்படுத்தும் போது அது போதிக்கப்படுகிறது. பின்னர் அவர்களிருவருமே சேர்ந்து தங்களது விசுவாசத்தை தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கின்றனர். எவ்வாறு? வீட்டிலே பெற்றோர் தம் பிள்ளைக்கு விசுவாசத்தை செலுத்துகின்ற தொடர்ச்சியான வழிமுறை, உபாகமம் 6:6 - 9ல் விவரிக்கப்பட்டுள்ளது:

> இன்று நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக் கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்கிறபோதும் எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவைகளை உன் கையின் மேல் அடையாளமாக கட்டிக் கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக் கடவது. அகைளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.

இந்தக் கட்டளைகளை அப்படியே பின்பற்றுவோர் ஒரு வீட்டிலிருந்தால் அது எப்பேர்பட்டதாயிருக்கும்? குடும்பம் ஒன்றுகூடி ஜெபிக்கின்றது, ஆராதிக்கின்றது, வேதம் வாசிக்கப்படுகிறது, போதிக்கப்படுகிறது. ஒழுக்கநெறி பற்றிய கேள்விகளுக்கு தேவவசன ஆதாரத்துடன் பதிலளிக்கப்படுகிறது. மற்ற நிகழ்ச்சிகளைவிட சபையின் நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பெற்றோர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளில் பின் தொடர்ந்து நடந்திட பிரயாசப்படுகிறவர்களாயும், "நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும்" தேவனிடமிருந்தே வருவதாக கருதி அவருக்கே கனத்தை அளிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள் (யாக்கோபு 1:17). இத்தகைய சூழலில் பிள்ளைகள் தானாகவே விசுவாசத்தை விருத்தி செய்துகொள்ளுகின்றனர். மேலும், இத்தகைய குடும்பத்தில் வெளிக்காட்டப்படும் விசுவாசமானது, எது நேர்ந்திடினும், பிரியாதபடிக்கு திருமணத்தை கெட்டியாய் சேர்த்திணைத்திடும் பசையாக/ஒட்டும் பொருளாக மாறிவிடுகிறது.

## ஆன்மீக இலட்சியங்களுக்கு முதலிடம் அளித்திடுங்கள்

இறுதியாக, ஆன்மீக இலட்சியங்கள் குடும்பத்திற்கு திசை காட்டட்டும். நீங்கள் திருமணம் செய்து கொள்ளும் போது உங்களுக்கு எண்ணற்ற இலட்சியங்கள் இருக்கும். பரஸ்பரம் திருப்திகரமானதோர் உறவுமுறையை

வளர்த்துக் கொள்ள நீங்கள் விரும்புவீர்கள். ஒருவேளை ஓர் குறிப்பிட்ட அளவு படித்து, உங்கள் குடும்பத்திற்கு போதுமான அளவு சம்பாதித்துக் கொடுப்பதற்கான, குறிப்பிட்டதோர் உத்தியோகத்தில் நுழைந்திட நீங்கள் விருப்பமுள்ளவராய் இருக்கலாம். இந்த இலட்சியங்களில் தவறேதுமில்லை. ஆயினும், கிறிஸ்துவுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பத்து அங்கத்தினர்களுக்கு அதிமேன்மையான ஓர் இலட்சியமுண்டு: பரலோகத்திற்கு செல்ல வேண்டும் என்பது தான்![7] தங்களது வீட்டை ஓர் ஆன்மீக அஸ்திபாரத்தின்மீது கட்டி எழுப்புகின்ற கிறிஸ்தவர்களோவெனில், தங்களது குடும்பமானது தங்களுக்கும், இயன்றவரை இன்னும் அநேகருக்கும் பரலோகம் செல்ல உதவிகரமாயிருக்க வேண்டுமென விரும்புகிறவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கு சேவைபுரிந்து பரலோகம் சென்றிட வேண்டுமென்பது தான் உங்கள் முழு முடிவாயிருக்குமானால் உங்கள் வாழ்வை நீங்கள் எவ்விதம் கழிக்கப்போகிறீர்கள் என்பதை அது தீர்மானித்திடும். ஒரு வங்கியாளனாய் இருப்பதற்கு பதிலாக ஓர் பிரசங்கியாக இருந்திட நீங்கள் முடிவுசெய்வீர்கள். நீங்கள் எங்கே குடியிருக்கப்போகிறீர்கள் என்பதிலும் அதன் தாக்கம் இருக்கும், ஏனெனில், குடும்பத்திற்கு அருகிலேயே இருப்பதற்கு பதிலாக ஒரு மிஷனரி களத்தில் உங்கள் பணியைத் தொடர நீங்கள் தீர்மானிப்பீர்கள். படிப்பிற்காக நீங்கள் எங்கே செல்லப்போகிறீர்கள், என்ன வேலையை ஏற்கப்போகிறீர்கள் அல்லது எந்தப் பள்ளிக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்பப் போகிறீர்கள் என்பதை அது தீர்மானிக்கும், அதாவது நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் "எனது குடும்பத்தாருக்கும், இன்னும் எங்கள் மூலமாக மற்றவர்களுக்கும், பரலோகம் செல்வதற்கு எது அதிகபட்ச உதவிகரமாயிருக்கும்?" என்ற கேள்விக்குரிய பதிலாகவே இருக்கும்.

எங்களது மருமகனாய் மாறிய இளைஞன் எங்கள் மூத்த மகளைத்திருமணம் செய்து கொள்வதற்கான சம்மதம் கேட்பதற்காக எனது மனைவிக்கும் எனக்கும் எழுதிய கடிதத்தில் இந்த மனோபாவம் வெளிக்காட்டப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியில் சொல்லப்பட்டிருந்தது என்னவென்றால்:

> நான் பரலோகத்திற்கு செல்வதற்கு உதவிகரமாயிருக்கும் ஓர் பெண்ணை நான் கண்டுபிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எனது தகப்பனார் எப்போதும் என் மனதில் பதியவைத்திருந்தார், அந்தப்பெண்ணை டீ ஆனில் நான் கண்டுகொண்டேன். டீ ஆனும் நானும் பேசிக்கொண்ட விஷயங்கள் பற்றி நான் உங்களிடம் பேச இயலாதுபோனது குறித்து வருந்துகிறேன். அவளை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன், அவளுக்கும் என்னைக் குறித்த இதே எண்ணமுண்டு என்பதை நான் அறிவேன், இதற்கு உங்கள் சம்மதம் கிடைக்குமாயின், அதற்காக நான் ஜெபிக்கவும் செய்கிறேன், ஏனெனில் அவளில்லாத என் வாழ்வை நான் நினைத்துப் பார்க்க இயலாதவனாயிருக்கிறேன்.[8]

உண்மையிலே, கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவரும், அவன் அல்லது அவள் பரலோகம் செல்வதற்கு உதவிகரமாயிருந்திடும் ஓர் துணையைத்தான் தேடிக்கொண்டிருக்க வேண்டும்!

ஒரு வீட்டின் அஸ்திபாரத்தில் ஓர் வேதாகமத்தைப் புதைத்தல் என்பது

ஏதோ அடையாளத்துவமான பொருளுடையதாயிருக்கலாம். எனினும் அந்த வீட்டிலே குடியிருக்கும் அந்தக் குடும்பத்தினர் தங்களது ஒன்றுபட்ட வாழ்வினை தேவவசனமாகிய ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தின்மேல் கட்டியெழுப்புதல் அதைவிட எவ்வளவோ அர்த்தமுடையதாயிருக்கும். உங்களுக்கு திருமணமாகும்போது அது உங்கள் குறிக்கோளாய் இருக்கட்டும்.

---

*குறிப்புகள்*

[1]Michael Graczyk, "Foundation on God," *Abilene Reporter-News* (26 August 2005): Cl. [2]*கலப்பு மத திருமணங்களின் பிறந்த பிள்ளைகள் சில சமயங்களில், எனது மனைவி செய்ததுபோல, பெற்றோரில் ஒருவரைத் தொடர்ந்து சபைக்கு செல்வதுண்டு. அவ்வாறு நிகழும்போது கர்த்தர் அகமகிழ்கிறார்; என்ற போதிலும் பிள்ளைகளும், பெற்றோரில் இன்னொருவரும் மதரீதியாக பிரிந்திருக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது.* [3]*இதற்கு கிறிஸ்தவ அன்பினால் நேசிப்பதற்குரிய நேர்மையான முயற்சிகள் (1 கொரிந்தியர் 13:4-7), ஆவியின் கனிகளைக் கொண்டிருத்தல் (கலாத்தியர் 5:22, 23), மற்றும் கிறிஸ்தவ குணாதிசயங்களில் வளருதல் (2 பேதுரு 1:5-7) ஆகியவை அவசியமாகின்றன.* [4]*பவுல் 2 கொரிந்தியர் 11:2ல் குறிப்பிட்டது போலவே, இயேசுவும்கூட மாற்கு 2:19ல், சபையை ஓர் மணவாட்டியாக குறிப்பிட்டிருக்கிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 21:2, 9; 22:17 ஆகியவற்றைப் பார்க்கவும்.)* [5]*எடுத்துக்காட்டாக, எபேசியர் 1:22, 23ன் பிரகாரமாக, சபையானது கிறிஸ்துவின் "நிறைவாய்" இருக்கிறது. கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்குமுள்ள உறவுமுறையைப் பற்றி எபேசியர் 5:23-31 விவரிக்கிறது.* [6]Wesley Shrum, "Religion and Marital Instability: Change in the 1970s?" *Review of Religious Research* 21 (1980): 135-47. *கிளன் ஸ்டேன்டன் அவர்களது "திருமணத்திலும், விவாகரத்தின் சாத்தியத்திலும், விசுவாசம் ஆற்றும் பங்கு" என்ற படைப்பில் இன்னும் ஒரு தகவல் தரப்பட்டுள்ளது,* Citizen Link - Focus on Social Issues (http://www.citizenlink.org/FOSI/marriage/A000000901.cfm; Internet; accessed 31 October 2008). *"மத சார்பற்றவர்களை விட, சபைக்கு ஒழுங்காக சென்று வரக்கூடிய விசுவாசிகளின் விவாகரத்து 35 சதவீதம் குறைவாயிருக்கிறது" என ஸ்டேன்டன் குறிப்பிட்டிருக்கிறார், இந்த விவாகரத்து விகித வித்தியாசமானது, மதப்பற்று உடையவர்களுக்கும் மதப்பற்று அற்றவர்களுக்குமிடையே உள்ளதல்ல, ஆனால் இது சபைக்கு ஒழுங்காக சென்று வருபவர்களுக்கும், அவ்வாறு செல்லாதவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும். சமீபத்திய அநேக அறிக்கைகள் இத்தகைய தொடர்பினை பிரதிபலிக்கின்றன. 2006ம் வருடத்திலே ஆய்வின் இணை ஆசிரியரான சமூக அறிஞர் பிராட் வில்காக்ஸ் என்பவர், ஒழுங்காக சபைக்கு சென்று வருபவர்கள் விவாகரத்து செய்து கொள்வதன் சாத்தியக்கூறுகள் குறைவாயிருப்பதை உறுதி செய்கிறார். "அமெரிக்கரில், பெயரளவில் சபைக்கு சென்று வருவோர், வருடத்தில் ஒரு முறையோ அல்லது இருமுறையோ சென்று வருவோர், அல்லது சபைக்கே செல்லாதவர்களைவிட 35 லிருந்து 50 சதவீதம் வரை, இவர்களின் விவாகரத்துவீதம் குறைவாயிருக்கிறது" என்கிறார் அவர். மதப்பற்றில்லாதவர்களைப் போன்று தான், மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்றிருக்கிறோம் என்று கூறிக்கொள்வோரும் "விவாகரத்து செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே, ஆனால் இதனை சபைக்கு வருகை தருதல் என்கிற பூதக் கண்ணாடியின் வழியாகப் பார்க்கும் போது வித்தியாசமான நிலையைக் காண முடிகிறது"* (Stan Guthrie, "What Married Women Want," interview with Brad Wilcox [http://www.christianitytoday.com/ct/2006/october/53.122.html; In-

ternet; accessed 24 October 2008]). The results of the study are available online: Steven L. Nock and W. Bradford Wilcox, “What’s Love Got to Do with It? Equality, Equity, Commitment, and Women’s Marital Quality” (http://www.virginia.edu/sociology/peopleofsociology/wilcoxpapers/Wilcox%20Nock%20marriage.pdf; Internet; accessed 24 October 2008). [7]*2 தீமோத்தேயு 4:7, 8ல் சொல்லப்பட்டுள்ள “நீதியின் கிரீடத்தை”ப் பெற்றுக் கொள்ள கிறிஸ்தவர்கள் ஆசையாய் காத்துக்கொண்டிருக்கிறார்கள். [8]1978 ஜுலை 2ம் தேதியன்று காய் ரோப்பருக்கும், ஷெர்லாட் ரோப்பருக்கும், ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸில் உள்ள பிளாக் டவுனைச் சேர்ந்த ஐயன் ஷெப்பர்ட் எழுதியனுப்பிய தனிப்பட்ட கடிதம் இது.*